Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 34 Pages 4 Sunday, 12 Ocotber 2008 Free Copy

வன்னிக்கான உணவு விநியோகம் ஆரம்பம்

கடந்த வாரம் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் சபையினால் ஒரு தொகுதி உணவுப் பொருட்கள் வன்னிக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்தன.

வன்னியில் இருந்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் முற்றாக வெளியேறிய பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த உணவு விநியோகம் பல்வேறு தரப்பினரின் கவனத்தையும் ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

51 பார ஊர்திகள் மூலம் சுமார் 650 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முதல் கட்டமாக வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்ட உணவுப் பொருட்கள் நேரடியாக இடம் பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட தாக ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற வாகனத் தொடரணியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் 7 வெளிநாட்டு பணியாளர்களும் வன்னி சென்று திரும்பியுள்ளனர்.

இந்த நடவடிக்கை தொடர்ச்சியாக மேற் கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் சபை யின் பேச்சாளர் கோர்டன் வொயிஸ் தெரி வித்துள்ளார்.

இதேவேளை கடந்த 3 ம் திகதி கொழும் பில் இந்த நடவடிக்கை குறித்து ஊடகவிய லாளர் மகாநாடு ஒன்றை அரசாங்கம் நடத்தி

வவுனியாவிலிருந்து வன்னிக்கு 51 வாகனத் தொடரணி மூலம் உணவுப் பொருட்களை ஐ.நா அமைப்பு எடுத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

யிருந்தது.

இங்கு கருத்து வெளியிட்ட அத்தியாவ சிய சேவைகள் ஆணையாளர் எஸ்.திவா ரட்ண வன்னியில் வாழும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் சேமிப்பினை ஏற்படுத்தவுள் ளதாக குறிப்பிட்டார்.

இதன் அடிப்படையில் 5000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் வன்னிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த மகாநாட்டில் கருத்து வெளியிட்ட மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமர சிங்க இலங்கைக்கு வருகை தந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலேயே செயல்பட வேண்டும் என்றும் மாற்றாக அர சாங்கத்தை வழிநடத்தும் வகையில் செயல் படக் கூடாது என்றும் கூறியிருந்தார்.

(3ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கு வருகை தந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலேயே செயல்பட வேண்டும், மாறாக அரசாங்கத்தை வழிநடத்தும் வகையில் செயல்படக் கூடாது

மீண்டும் வாழ்வோம் திகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அதர் எப்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத் தளத்திலும் கேட்கலாம்.

சுருக்கம்

- அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப் படையில் திரட்டப்பட்ட IASC 146ஆவது அறிக் கையின் படி இலங்கையில் 76,018 குடும்பங்களைச் சேர்ந்த 291,832 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.
- மீன்பிடிப்பதற்கு எதிர்கொள்ளப்படுகின்ற நெருக்கடிகளை சுமூகமாகத் தீர்த்துக்கொள்வதற்கு ஏதுவாக தீவகப் பகுதிகளில் மீனவர்களை தொழில் செய்ய அனுமதிப்பது தொடர்பான மாநாடொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்று முடிந்துள்ளது. யாழ் கடற்றொழில் திணைக்கள அலுவலகத்தில் இடம் பெற்ற இம்மாநாட்டில் குருநகர், பாசையூர், கொழும் புத்துறை பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதி நிதிகளும், தீவக மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் கடற் தொழில் திணைக்கள யாழ் அலுவலக உதவிப்பணிப் பாளரும், மீனவர் சமாசங்களின் சம்மேளனத் தலை வர்களும் கலந்துகொண்டனர்.
- மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் விவ சாயத்துறையை முன்னேற்றுமுகமாக OXFAM நிறு வனம் கடந்த 30ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து கருத்தரங் கொன்றை மட்டக்களப்பில் நடத்தியிருந்தது. இதில் விவசாய உற்பத்தியிலிருந்து சந்தைப்படுத்தல் வரை விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர் பாக ஆராயப்பட்டது.
- இடம்பெயர்ந்து வன்னியிலிருந்து வவுனியா விற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்ற மக்கள், சிறுவர்கள் தொடர்பாக சில வேலைத்திட் டங்களை முன்னெடுக்கவிருப்பதாக, வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் வவுனியா மாவட்டத்தின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர் களுக்கான செயல்திட்ட அதிகாரி திருமதி. சசிகுமார் ஆகியோரும் தெரிவித்துள்ளனர்.

பேசும் படம்

திருகோணமலையின் கிளிவெட்டி பிர தேசத்தில் அமைந்துள்ள முகாமில் இளை ஞர்களும் சிறுவர்களும் கிரிக்கெட் விளை யாடுவதைப் படத்தில் காணலாம். திரு கோணமலை கிழக்கிலிருந்து 2006ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் திரு கோணமலையின் பல்வேறு பிரதேசங்க ளில் உள்ள முகாம்களில் வாழ்ந்து வருகின் றனர். விரைவில் 1900 குடும்பங்கள் குடி யேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளி னால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடி யேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக் களின் ஓர் அங்கமாகும்.

நாளைய தலைவர்களின் இன்றைய நிலை என்ன?

யாழ். குடாநாட்டில் தொடரும் யுத்த நெருக்குவாரங்கள் மாணவர்களிடையே கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தி வரு கின்றது. அவ்வகையில் விசேட தேவை கள் உள்ளோர் என அடையாளப்படுத்தப் பட்ட மனவளர்ச்சி குன்றிய மாணவர்கள் எண்ணிக்கையும் சொல்லிக்கொள்ளத்தக்க அளவினில் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான மாண வர்களுக்கும் சமமான கல்விய றிவை வழங்க கல்வி அமைச்சு பல்வேறு தரப்புகளின் உதவியு டன் நட வடிக்கைகளை எடுத்து வருகின்றது.

'விசேட தேவைகள் உள்ள சிறார்களிற்கும், ஏனைய மாண வர்கள் போன்றே கல்வி கற் பதற்கான வசதிவாய்ப்புக் களை உருவாக்கி வழங்குவதே எமது நோக்கம்' என்கின்றார் யாழ்.வலய கல்வித்திணைக் களத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் செல்வி சந்திரிகா. இவர் விசேட தேவைகளுக்கு குள்ளான மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டிற்காக ஆர்வத் துடன் செயற்பட்டு வருபவர். எதிர்வரும் டிசம்பர் 3ஆம் திகதி சர்வதேச அங்கவீனர் தினமாகும். அதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியொன்றை யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளரது அனுசரணையுடன் வட மாகாண கல்வி அமைச்சு நடத்தி முடித்துள்ளது. விசேட தேவைகளையுடையவர்களென அடை யாளப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள் இதில் பங்கெடுத்திருந்தனர்.

இதனிடையே விசேட தேவைகளுக்குள் ளான மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டினில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் களுக்கான விசேட பயிற்சிப்பட்டறைக ளும் தற்போது நடைபெற்று வருகின்றன. 'நிக்கோட்' எனப்படும் வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட் டம், மாகாணக்கல்வி அமைச்சுடன் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளது. இதே வேளை விசேட கல்விவள நிலையமொன்றை நிறுவுவதற் கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதற் கான நிதி உதவியை அரசிடம் உரிய தரப்பு கள் கோரியுள்ளன. குறித்த கல்வி வள நிலையம் நிறுவப்படுமிடத்து ஆசிரியர்க ளுக்கு முறையான பயிற்சிகளை வழங்கி விசேட தேவையுடைய மாணவர்களுக் கான கல்வித்தரத்தை மேம்படுத்தமுடியு மென எதிர்பார்க்கப்படுகின்றது. 'குறிப் பாக புதிதாகக் கட்டப்படும் வகுப்பறைக ளது நிர்மாணத்தில், விசேடதேவைகளு டைய சிறார்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி வழங்கப் படவேண்டு மென 'யாழ்.மாவட்ட விழிப்புலன் வலு வற்றோர் சங்கம்' கோரியுள்ளது. எதிர் வரும் காலங்களில் கட்டிட நிர்மாண வேலைகளுக்குத் திட்டமிடுகையில் இதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமெனவும் அவை வலி யுறுத்துகின்றன. எனினும் யாழ்ப் பாணத்தில் அவ்வாறான வசதிகள் ஏற்படுத்தப்பட்ட கட்டிடங்கள் எதுவுமில்லை என்கின்றன யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள்.

எனினும் விசேட தேவைகள் உடைய மாணவர்கள் உட்பட எந்த வொரு மாணவனுமே இடைநடு வில் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலகிக்கொள்வதை ஏற்க எந்தத்தரப்புகளுமே தயாராக இல்லை. மாணவர்கள் தொடர்ந் தும் பாடசாலைகளுடன் இணைந் திருக்க உரிய ஏற்பாடுகளை செய்து வழங்க கல்வி அமைச்சு உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டேயிருக்கின்றது. எனினும் குடும்பங்களில் தொழில் இழப்புகளினால் எற்பட்டுள்ள வருமான இழப்பு, கல்வி கற்கும் வயதிலுள்ள சிறார் களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியே வரு கின்றது. தொடரும் யுத்தம் மிதிவெடி பாதிப்பு மற்றும் இயற்கை அனர்த்தமென விசேட தேவையுடைய சிறார்களது எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து கொண்டேயி ருக்கின்றது.

இந்நாட்டின் நாளைய தலைவர்களான இவர்களை அரவணைக்க வேண்டியது அனைவரதும் கடமையல்லவா?

சுனாமரம்

வட பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த அதிகமான முஸ்லிம் மக்கள் புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு அகதி முகாம்க ளில் வசித்து வருகின்றனர். நோன்புப் பெருநாளை நலன்புரி நிலையங்களில் எவ்வாறு கொண் டாடினார்கள்? சொந்த இடத்தில் இருந்திருந்தால் எவ்வாறு கொண் டியிருப்பார்கள் என்பது தொடர் பாக கேட்டபோது அவர்கள் கூறிய பதில்கள் இவை.

அப்துல் அசிசலிமா: உணவுப் பொருட்களை இங்கு கொண்டு வந்து விற் கின்றார்கள். வசதி குறைந்த வர்கள் பேரீச்சம்பழம் மட் டும் வாங்குகின்றார்கள். தங் களிடம் இருப்பவர்கள் பிற ருக்கு கொடுக்கின்றார்கள். இது தனிப்பட்ட ஒருவரு டைய முகாம் இல்லை. ஒரு குடும்பமாக இருப்பதால் பகிர் ந்து கொடுத்து சந்தோசமாக இருக் கின்றோம். உடுப்புகள் எடுத்து பெரு நாளைக் கொண்டாடுகின் றோம்.

உசைன் மலீனா: எங்களு டைய சொந்த ஊர் என்றால் நோன்பை சிறப்பாகக் கொண்டா டுவோம். அகதி முகாம் என்றபடி யால் கொஞ்சம் கஷ்டமாக இருக் கின்றது. நோன்பு பிடிப்பது கட்டா யக் கடமை. சொந்த இடத்தில் ஆயிரம் செலவு செய்து பெரு நாளைக் கொண்டாடினால், இங்கு 500 ரூபாய்க்குள் சமாளித்துச் செய்கின்றோம். இங்கு வருமா னம் போதாது. சொந்த இடத்தில் எமக்கு நல்ல தொழில் இருந்தது.

புத்தளம் சோல்ட்டன் முகாம் மக்கள் ரம் ழான் பெருநாளுக்காக ஆடைக் கொள்வன வில் ஈடுபட்டுள்ளனர்.

சுவைதா: நோன்பு பிடிக்கத் தான் வேண்டும் என்பதற்காகப் பிடிக்கின்றோம். சொந்த இட மென்றால் இன்னும் சிறப்பாக இருக்கும். இங்கு ஒரு பொருள் இருந்தால் இன்னொன்று குறையா கத்தான் இருக்கின்றது. உழைப்பு இங்கு மிகவும் குறைவு. நோன்பு பிடிப்பது மிகவும் கஷ்டம். அங்கென்றால் பலகாரங்கள் செய்வோம். அதிகாலை 3 மணிக்கு எழுந்து சமைப் போம். இங்கு ஒரு நேரம் சமைப்பதென்றால் கூட கஷ்டமாகவுள்ளது.

கலந்தை லெப்பை சித்திக்: நோன்பு தொடங் கிய நாளிலிருந்து நோன்பு பிடித்துக்கொண்டு இருக் கின்றோம். சொந்த இடத்தில் இருந்திருந்தால் இதை விட சிறப்பாக செய்திருப்போம். வீட் டிற்கு அருகிலேயே வாழை மரம் இருக்கும். இங்கு வாழைப் பழத் துக்காக வரிசையில் நின்று கிலோ கணக்கில் வாங்கி வருகின்றோம்.

வாழ்வின் வர்ணங்கள்

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம் கொண் டாடப்பட்டது.

பெற்றோரிடமிருந்து பாது காப்பை பெறுவதற்கு சிறுவர்கள் உரிமையுடையவர்கள். பண்டார வளை சிறுவர் இல்லமொன்றில் பராமரிக்கப்படும் 11 வயதான சிறுமி கவிதா தகப்பன் தன்னை விட்டு பிரிந்து சென்றதால் தனக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எம் மோடு பகிர்ந்து கொள்கின்றார்.

எனது அம்மா இரண்டு திரு மணங்கள் செய்திருக்கின்றார். முதலாவதாக திருமணம் செய்தவர் இறந்து விட்டார். முத லாவது திருமணத்தின் மூலம் எனது அம்மாவிற்கு ஒரு பெண்பிள்ளை இருக்கின் றது. இரண்டாவதாக திருமணம் செய்தவருக்குத்தான் நானும் எனது அக்காவும் பிறந்தோம். எனது அப்பா நான் சிறு வயதாக இருக்கும் போதே அம் மாவை விட்டுப்பிரிந்து தாத்தா வசிக்கும் ஊருக்கு சென்று விட்டார். காரணம் அம்மா எங்களை படிக்க வைப்பதற்காக வெளிநாடு சென்றார். அப்பாவிற்கு அம்மா வெளிநாடு சென்றது விருப்பமில்லை. அதன் பிறகு அப்பா வேறொரு திருமணம் முடித்துவிட்டார். சில நாட்களுக்கு பிறகு என்னை அழைத்து செல்வதற்காக அப்பா எங்கள் வீட்டிற்கு வந்திருக்கின்றார். என்னை அழைத்துச் செல்வதாக நினைத்து எனது மூத்த அக்காவை அழைத்துக்கொண்டு சென்றிருக்கி றார். அம்மா வெளிநாட்டிலிருந்து வந்ததன் பிறகு தேயிலை தோட்டத்தில் வேலைசெய்து எங்களைப் படிக்க வைத்தார். தற்போது அக்காவும் வேலை செய்கிறார். நான் பிறந்ததிலி ருந்து என்னை ஒரு தடவைதான் அப்பா பார்த்திருக்கிறார். அதன் பிறகு வரவே இல்லை. மீண்டும் அப்பா திரும்பி வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

(01 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையின் இந்த மனிதாபிமான நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட கோர்டன் வொயிஸ் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாகவே தாங்கள் இந்த செயல்பாட்டை முன்னெடுத்துள்ளதாகவும் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நேரடியாக உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் தாங்கள் ஈடுபடவுள்ளதாகவும் அவர் கூறினார். முதல் கட்டமாக உணவுப் பொருட்களை வன்னிக்கு அனுப்பும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்வரும் காலங்களில் ஏனைய பொருட்களையும் வன்னிக்கு கொண்டு செல்வதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்கமும் வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உலர் உணவுகளை நிவாரணமாக வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்று மாதாந்தம் 1250 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளர் ராசீக் தெரிவித்துள் ளார்.

இதேவேளை உணவுப் பொருட்களை போலவே ஏனைய அத்தியாவசிய பொருட்களான உடை மற்றும் உறைவிடம் ஆகியவற்றுக்கும் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக வன்னியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன

குறிப்பாக புதிதாக இடம்பெயர்ந்துள்ள மக்களை தங்க வைப்பதற்கு 25000 தற்காலிக தங்குமிடங்கள் தேவைப் படுவதாக மனிதநேய ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முனைப்புப் பெறும் மீள்குடியேற்றம்

இடம்பெயர்ந்தவர்கள் தமது காணிகளை இழந்தவர்கள். தங்களை மீளக்குடியமர்த்தும் போது காணியுடன் வீடும் வழங்குவதை அவர்கள் விரும்புகின்றார்கள்

(தேசிய நீதியிலான திட்ட வரைவு தொடர்பாக ஆலோசனைகள் பெறும் மாநாடு குறித்த கண்ணோட்டம்)

இலங்கையில் 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் பல்வேறு காரணிகளினால் இடம் பெயர்ந்தவர்களின் நலனை முன்னிட்டு அவர்களை மீள்குடியமர்த்தும் நோக்கில் தேசிய நீதியிலான திட்ட வரைவு தொடர் பாக ஆலோசனைகள் பெறும் மாநாடு செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை கொழும்பில் மூன்று நாட்கள் நடைபெற்றது. இடர் முகாமைத் துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு டன் இணைந்து ஐக்கிய நாடுகளுக்கான அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் இணைந்து இம்மாநாட்டை நடத்தியது.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க திட்ட வரைவின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அதிகரித்து வரும் இனம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ள சாதகமான தீர்மானங்களை குறிப்பிட வேண்டும். இதனால் தற்போதுள்ள திட்டங்களை முன்னெடுக்க முடியாமற்போகும் என்றாலும் இதன் காரணமாக கடினமான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

மீளக்குடியமர்த்தும் செயற்பாடுகளுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற நியதி முறைகள் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனித உரிமைகள் பிரதிநிதியான பேராசிரியர் வால்டர் கெலின் இம்மாநாட்டில் தெரிவித்தார்.

நீண்டகாலத் தீர்வுத் திட்டமானது 1998 ஆம் ஆண்டு சர்வதேச இடம்பெயர்வு கொள்கையினை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும் இடம்பெயர்ந்த மக்களுடைய உரிமைகள் பற்றி இந்த கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதுகுறித்து அனைத்து சட்டதிட்டங்களிலும் மீண்டும் மீண்டும் இவை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் இலங்கை நாடு மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களில் கையொப்பமிட்டுள்ளது. அவை 2005ஆம் ஆண்டு உலக மாநாட்டில் அரசாங்கத் தலைவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணம் 'இடம்பெயர்ந்த மக்களுக்கான முக்கியமான சர்வதேச பாதுகாப்பு ஆவணம்' என்ற நோக்கில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய நீதியிலான திட்ட வரைவு தொடர்பாக ஆலோசனைகள் பெறும் மாநாட்டில் கலந்து கொண்டோரை படத்தில் காணலாம்.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் போது கவனத்தில் எடுக்க வேண்டிய மூன்று வழிமுறைகள் இருப்பதாக, பேராசிரியர் வால்டர் கெலின் தெரிவித்தார். 'தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லுதல் முதலாவது வழியாகும். இலங்கையில் பொதுவாக தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர்வதைப் மீள்குடியேற்றம் என்று அழைக்கப்படுகின்றது. இரண்டாவது நீண்டகாலமாக இடம்பெயர்ந்துள்ள பிரதேசங்களில் தமது நிலையினை நிரந்தரமாக்கச் செய்தல். அப்பிரதேசங்களோடு ஒன்றிணையச் செய்தல். மூன்றாவது வழி இன்னுமொரு பிரதேசத்தில் சென்று குடியமர்த்துவது'

யாழ்ப்பாணத்தில் 25,532 குடும்பங்களும் மன்னாரில் 6700 குடும்பங்களும் வவுனியாவில் 9441 குடும்பங்களும் 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர் மக்களின் எண்ணங்களும் கருத்துக்களும் மீளக்குடியமர்த்தும்போது கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என UNHCR அமைப்பின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் ஜெனட் லிம் மாநாட்டில் குறிப்பிட்டுக் கூறினார். இடம்பெயர்ந்தவர்கள் தமது காணிகளை இழந்தவர்கள். தங்களை மீளக்குடியமர்த்தும்போது காணியுடன் வீடும் வழங்குவதை அவர்கள் விரும்புகின்றார்கள். கருத்துக்கணிப்பில் இடம்பெற்ற சிலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்தில் நிலமைகள் வழமைக்குத் திரும்பும் பட்சத்தில் மீண்டும் செல்ல விருப்பமுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள் என ஜெனட் லிம் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலையில் 4323 குடும்பங்களும் புத்தளத்தில் 12,887 குடும்பங்களும் மட்டக்களப்பில் 584 குடும்பங்களும் அனுராதபுரத்தில் 1358 குடும்பங்களும் அம்பாறையில் 143 குடும்பங்களும் 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்துள்ளதாக மாநாட்டில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான முயற்சிகளுக்கு சர்வதேச அளவில் உதவிகள் வழங்கப்படும் என இந்த மாநாட்டின் முடிவில் தெரிவிக்கப்பட்ட உறுதிமொழிகள் நம்பிக்கைக் கீற்றுக்களைத் தோற்றுவித்துள்ளன.

உங்களுக்குத் தெரியுமா?

நீர் மற்றும் சுகாதாரத்திற்கான மூன்று பொன்னான வழிமுறைகள்

1. **சுத்தமான நீர் அருந்தி சுகாதாரமாக வாழுங்கள்!** அனைத்துத் தேவைகளுக்கும் பாதுகாப்பான நீரைப் பயன்படுத்தி, சுத்தமான நீரை பருகுங்கள்.

2. **சுகாதாரம் உங்கள் கைகளில்** - உணவருந்துவதற்கு முன்னரும் உணவுப் பொருட்களைக் கையாளும் முன்னரும் கழிவறை சென்று வந்த பின்னரும் உங்கள் கைகளைக் கழுவுங்கள்.

3. **சுகாதாரமான கழிவறை, வாழ்வைப் பாதுகாக்கும்** - நோய்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொருவரும் கண்டிப்பாக சுகாதாரமான கழிவறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

வன்னி இடம்பெயர் மக்களுக்காக வவுனியாவில் முன்னேற்பாடுகள்

யுத்தகாப் நடவடிக்கைகள் காரணமாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இடம்பெயர்ந்திருக்கின்ற மக்கள் தொடர்பாகவும் அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகின்ற போது அவர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இது குறித்து அறிந்துகொள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான செயற்திட்ட அதிகாரியாக வவுனியா மாவட்டத்தில் பணியாற்றி வரும் திருமதி சசிகுமார் அவர்களை நேர்கண்டுள்ளோம்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து மக்கள் வவுனியாவிற்கு வருகின்றபோது மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் எவ்வகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன?

கட்டுப்பாடற்ற வன்னி பகுதியிலிருந்து இரண்டு இலட்சம் பேர் இடம் பெயர்ந்து வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் தான் நாம் தற்போது செயற்பட்டு வருகின்றோம். அதன்படி நாற்பதாயிரம் சிறார்கள் இடம் பெயர்ந்து வவுனியா நோக்கி வருவார்கள் என்ற அடிப்படையில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விஷேட செயற்திட்டத்தின் கீழ் சில செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். முதற்கட்ட நடவடிக்கையாக எமது கண் காணிப்பின் கீழ் அவர்களைப் பாரமெடுப்பதிலிருந்து ஏனைய ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றோம். ஒக்டோபர் முதலாம் திகதியிலிருந்து சிறுவர் பாதுகாப்பு குழு ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இதனடிப்படையில் பொலிசார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலர்களுக்கு சில பயிற்சி நெறிகளை வழங்குவதோடு சிறார்களிடமிருந்து கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டு பதிவுகளை ஏற்படுத்துமாறு கூறியிருக்கின்றோம். சிறுவர்களுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை பெற்றுக் கொடுக்க அது தொடர்பான தினைக்களங்களோடு தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

மனித உரிமை ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான வவுனியா மாவட்ட செயற்திட்ட அதிகாரி திருமதி சசிகுமார்

60 இளைஞர் யுவதிகளை தெரிவு செய்து அவர்களுக்கு சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை ஒன்றை வழங்கி அவர்கள் மூலமாக சிறுவர்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சேவையை நடைமுறைப்படுத் துவதற்கு தயார் நிலையில் உள்ளோம்.

உங்களுடைய செயற்திட்ட மானது இடம் பெயர்ந்து வருகின்ற மக்களை குறிக்கோளாகக் கொண்டு நடத்தப்படுமா? அல்லது சிறுவர்களுகான செயற் திட்டமாக அமையுமா?

இடம் பெயர்ந்து வருகின்ற மக்கள் அனைவரையுமே பொறுப் பேற்று கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின் றோம். குறிப்பாக இந்த விஷேட செயற் திட்டமானது சிறுவர்களை நோக்காகக்கொண்டு செயற்பட வுள்ளது. இதற்காக 60 இளைஞர் யுவதிகளை தெரிவு செய்து அவர்களுக்கு சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை ஒன்றை வழங்கி அவர்கள் மூலமாக சிறுவர்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சேவையை நடைமுறைப்படுத் துவதற்கு தயார் நிலையில் உள்ளோம்.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செய்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS USAID FROM THE AMERICAN PEOPLE

சோலை மர நிழலெல்லாம்
சோகமின்றி வாழ்ந்த நாம்
ஓயாதா செல்லடியால்
ஓலமிட்டு ஓடிவந்து
ஊன் உறக்கமேதுமின்றி
தவித்து நின்றோம்!

சீரோடு இருந்த எம்
தூய தமிழ் பூமியிலே
ஷெல்வந்து வீழ்ந்தவுடன்
சீரழிந்ததெம் வாழ்வு!
அகதியென்ற பெயர் சூட்டி
அமர்த்தி வைத்தீர் அக்கினியில்!

தகரக் கொட்டில்
தண்ணீருக்குப் பஞ்சம்?
நினைத்துப் பார்த்ததில்லை
நிலையற்ற இவ்வாழ்வை!
குளிப்பதற்குக் காத்திருந்து
கூனிமீன் கழுவினாற்போல்
குளித்துவிட்டு வரும் வாழ்வு!

எம் பள்ளிதனை நினைத்தால்
இந்த பாலை மரத்தடியில்
படிக்க மனம் வருமா?
செல்லடித்து ஓய்ந்திருந்தும்
சேனையூரில் இன்னும் எம்
செல்வம் எடுத்து ஓயவில்லை!

இப்படியிருக்க குடி
எப்போது ஏற்றுவது?
எம் ஊர் பார்க்க
இன்றோ நாளையோ என்று
இரண்டு வருடமாய்
எங்களூர் மக்களுடன்
ஏங்கி ஏங்கித் தவித்து நிற்கும்
முத்தூரின் புதல்வன்!

ஜெயச்சந்திரன் ஜெயராஜ்

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து மட்டக்களப்பு சாஹிரா நலன்புரி நிலையத்தில் வாழும் ஜெயச்சந்திரன் ஜெயராஜ் அகதி வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் தனது உள்ளக்கிடக்கையையும் எம்மோடு பகிர்ந்துகொள்ளும் நோக்கில் தனது கவிதையை எமது மீண்டும் வாழ்வோம் பத்திரிகைக்கு எழுதி அனுப்பியுள்ளார்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.